Stadt Chur

**Deutsch für die Schule**

# மழலையர் பள்ளிக்கு முந்தைய வருடம் ஜெர்மன் மொழி கற்றல்

---

## பெற்றோர்களுக்கான தகவல்

Januar 2022

ஐந்து வயதில் மழலையர் பள்ளியில் நுழையும்போது, ஒரு குழந்தைக்கு ஜெர்மன் மொழியில் பேச தெரிந்திருக்க வேண்டும். சுர் நகரத்தைச் (chur city) சேர்ந்த ஒரு குழந்தைக்கு ஜெர்மன் குறித்த போதுமான அறிவு இல்லையென்றால், அவர் அல்லது அவள் ஆரம்ப மொழி மேம்பாட்டுக்கான திட்டத்தில் கலந்து கொள்வார்கள்: மழலையர் பள்ளிக்கு முந்தைய ஆண்டில், குழந்தைகளை ஒரு வாரத்தில் இரண்டு அரை நாட்கள் ஒரு ஜெர்மன் மொழி குழந்தை பராமரிப்பு நிலையத்தில் ஜெர்மன் பேசும் குழந்தைகளுடன் சேர்த்து கவனித்துக் கொள்ளப்படுகிறார்கள். பெற்றோர் கல்வித் திட்டத்தில் பெற்றோர்கள் பங்கேற்று, ஆதரவு ஆண்டில் தங்கள் குழந்தைக்கு தீவிரமாக ஆதரவளிக்கிறார்கள். இதனால் குழந்தைகளுக்கு என்ன பலன், பெற்றோர்கள் எவ்வாறு செயல்பட வேண்டும் மற்றும் இதற்கு ஆகும் செலவுகள் என்ன? ஒரு கண்ணோட்டம்.

**மழலையர் பள்ளிக்கு முன்பே குழந்தைகள் ஏன் ஜெர்மன் மொழியைக் கற்றுக்கொள்ள வேண்டும்? *சம வாய்ப்புகள்***

பள்ளியில் வெற்றிபெற ஜெர்மன் மொழி அறிவு மிகவும் முக்கியமானது. மழலையர் பள்ளிக்குள் நுழையும்போது ஓரளவு அல்லது ஜெர்மானிய மொழியே பேசாத குழந்தைகள் தங்கள் பள்ளி வாழ்க்கையைத் தங்கள் ஜெர்மன் பேசும் தோழர்களை விட மோசமான நிலைமைகளுடன் தொடங்குகிறார்கள். குழந்தைகள் ஒரு சுற்றுச்சூழல் மொழியாக ஜெர்மன் மொழியில் தேர்ச்சி பெற பல ஆண்டுகள் ஆகும். அதனால்தான் அவர்கள் மழலையர் பள்ளியைத் தொடங்குவதற்கு முன்பே அவர்கள் ஜெர்மன் மொழியைக் கற்றுக்கொள்வது முக்கியம்.

மொழி கற்றல் மற்றும் வளர்ச்சிக்கான மிக முக்கியமான வயது பள்ளி செல்வதற்கு முந்தைய பாலர் வயதாகும். சுர்-ல் (chur) மழலையர் பள்ளி நுழைவு ஐந்து வயதில் நடைபெறுகிறது.

சுர் பள்ளி சட்டம் (711, பிரிவு. 39) குறைந்த ஜெர்மன் அறிவு அல்லது ஜெர்மன் அறிவே இல்லாத பள்ளி செல்வதற்கு முந்தைய பருவம் உடைய குழந்தைகளுக்கு "Deutsch für die Schule" திட்டத்தின் கீழ் ஆதரவு அளிப்பதற்காக உருவாக்கப்பட்டுள்ளது மற்றும் இதில் பங்கெடுப்பது பெற்றோர்களுக்கும் அவர்களின் குழந்தைகளுக்கும் கட்டாயமாகும்.

**சிறு குழந்தைகள் ஜெர்மன் மொழியைக் கற்றுக்கொள்வது எப்படி?**
***விளையாட்டுப்போக்கில், ஒரு குழந்தையிடமிருந்து மற்றொரு குழந்தைக்கு***

சிறு குழந்தைகள் அவர்கள் வசதியாக உணரும்போது கற்றுக்கொள்கிறார்கள் அவர்கள் தூண்டுதல் தரக்கூடிய சூழல் மூலமும், அன்றாட சூழ்நிலைகளில் பராமரிப்பாளர்களுடனான தொடர்பினாலும், உடனிருக்கும் சக குழந்தைகள் மூலமாகவும் கற்றுக் கொள்கிறார்கள். விளையாட்டுக் குழு (Spielgruppen), குழந்தை வளர்ப்பகங்கள்(Kinderkrippen), பகல்நேர பராமரிப்பு மையங்கள் (Tagesfamilien) மற்றும் மாண்டெஸ்ஸரி மழலையர் பள்ளியில்(Montessori Kindergarten)உள்ள எங்கள் நிபுணர்கள், இலக்குடன் கூடிய விளையாட்டுபோக்கான வழியில் மொழி வளர்ச்சியை ஊக்குவிக்க பிரத்தியேக பயிற்சி பெற்றவர்கள் (வழங்குபவர்களின் பட்டியலைப் பார்க்கவும்).

ஜெர்மன் மொழியைக் கற்றுக்கொள்வதை ஆதரிப்பதோடு மட்டுமன்றி இதுபோன்ற சலுகையைப் பெற இன்னும் பல காரணங்கள் உள்ளன. இந்த நிறுவனங்களில் குழந்தைகள் ஒன்றாக விளையாடுகிறார்கள், ஒரு குழுவில் ஒன்றிணைந்து, அவர்களின் ஆளுமையை வளர்த்து, அதிக சுதந்திரம் பெற்றவராக உருவாகிறார்கள். குழந்தைகளுக்கு ஒருமித்த ஆதரவு வழங்கப்படுகிறது.

**எனது குழந்தை ஜெர்மன் நன்றாக பேசுகிறதா என்பதை நான் எவ்வாறு கண்டுபிடிப்பது?**

பேஸல் பல்கலைக்கழக வல்லுநர்கள் அறிவியல் முறையில் ஒரு கேள்வித்தாளை உருவாக்கியுள்ளனர். இது பெற்றோர்கள்,அவர்கள் ஜெர்மன் மொழி பேசாவிட்டாலும் கூட, தங்கள் குழந்தையின் ஜெர்மன் அறிவை துல்லியமாக மதிப்பிட உதவுகிறது. கேள்வித்தாள் பல மொழிகளிலும் கிடைக்கிறது. மழலையர் பள்ளியில் குழந்தைகள் நுழைவதற்கு ஒன்றரை ஆண்டுகள் முன்னதாக வெளிநாட்டு மொழி பின்னணி கொண்ட குடும்பங்களுக்கு இது ஜனவரி மாதம் தபால் மூலம் அனுப்பப்படுகிறது.

அந்த கேள்விதாளை பெற்றோர்கள் உண்மையுடன் பூர்த்தி செய்து திருப்பி அனுப்ப வேண்டும்.

மார்ச் மாதத்தில், சமூக சேவைகள் சுர், முடிவு மற்றும் அடுத்த படிகள் குறித்து பெற்றோருக்கு எழுத்துப்பூர்வமாக தெரிவிக்கும். மழலையர் பள்ளியில் சேருவதற்கு ஜெர்மன் பற்றிய

குழந்தையின் அறிவு போதுமானதாக இல்லை என்று மதிப்பீடு காட்டினால், "Deutsch für die Schule" திட்டத்தில் பங்கேற்க பெற்றோர்கள் ஒரு ஒப்பந்த விண்ணப்பத்தைப் பெறுவார்கள். பெற்றோர்கள் பதிவு செய்ய மறுத்தால், அவர்கள் சமூக சேவைகளில் எழுத்துப்பூர்வ அறிக்கையை சமர்ப்பிக்கலாம். பங்கேற்காவிட்டால் தண்டனைச் சட்டம் பிரிவு.292 இன் படி அபராதம் விதிக்கும் நிலை ஏற்படலாம்.

**பதிவு செய்தல் - அடுத்து என்ன? *இடத்தை உறுதி செய்தல்***

"Deutsch für die Schule" திட்டத்திற்கான பதிவுடன், பெற்றோர்கள் அதை வழங்குபவர்களின் பட்டியலுடன், கிடைக்கக்கூடிய விளையாட்டுக் குழுக்கள், பராமரிப்பு மையங்கள், மற்றும் இளநிலை மழலையர் பள்ளி இவைகளையும் பெறுவார்கள். பெற்றோர்கள் ஒரு நிறுவனத்துடன் தொடர்பு கொண்டு, அங்கு உள்ள நிகழ்ச்சிகளை “முயற்சி” செய்யலாம் மற்றும் ஒரு இடத்தையும் முன்பதிவு செய்யலாம். "Deutsch für die Schule" திட்ட மேலாண்மை பெற்றோர்கள் இடத்தை கண்டுபிடிக்க உதவும்.

பெற்றோர்கள் ஒரு இடத்தைக் கண்டறிந்திருந்தால், அவர்கள் அந்த இடத்தின் உறுதிப்பாட்டை வழங்கும் நிறுவனத்தின் மேலாளருடன் உறுதி செய்வார்கள். மேலாளர் திட்ட மேலாளருக்கு உறுதிப்படுத்துதலை அனுப்புவார்.

**எனது குழந்தை எத்தனை முறை பங்கேற்க வேண்டும்? மழலையர் பள்ளிக்கு முந்தைய ஆண்டில் வாரத்திற்கு 2 முறை 3 முதல் 4 மணி நேரம்**

குழந்தைகள் மழலையர் பள்ளியில் நுழைவதற்கு முன்பு, வாரத்தில் இரண்டு அரை நாட்கள் ஜெர்மன் மொழியைக் கற்க இந்த திட்டம் கட்டாயப்படுத்துகிறது. ஒரு விளையாட்டுக் குழுவில் அரை நாள் என்பது மூன்று மணி நேரம் நீடிக்கும். முறையான வருகைகள் கட்டாயமாகும். சுர் நகரத்தின் பள்ளி விடுமுறை நாட்களை அடிப்படையாகக் கொண்டது விளையாட்டுக் குழுக்கள். குழந்தை பராமரிப்பு மையங்களில், திட்டம் வழக்கமாக ஆகஸ்டு 1ம் தேதி ஆரம்பிக்கும் ஜூன் 30இல் முடியும். குழந்தை வழக்கமாகப் பங்கேற்காவிட்டாலும் அல்லது பங்களிப்புகள் செலுத்தப்படாவிட்டாலும் வழங்குநர் திட்ட நிர்வாகத்திற்கு அறிவிப்பார் என்பதை பெற்றோர்கள் ஒப்புக்கொள்கிறார்கள்.

**பெற்றோர்கள் எவ்வளவு செலுத்த வேண்டும்? *நிதி உதவி***

ஒரு குழந்தை இந்தத் திட்டத்தில் பங்கேற்றால், சுர் நகரம் கட்டணக் குறைப்பு வடிவத்தில் பராமரிப்பு செலவுகளுக்கு பங்களிக்கிறது. இவை வரி விதிக்கக்கூடிய வருமானம் மற்றும் சொத்துக்களுக்கு ஏற்ப தரப்படுத்தப்படுகின்றன மற்றும் அந்தந்த கட்டணங்களில் 20 முதல் 80% வரை இருக்கும்.

அதிகப்படியான நேரங்களுக்கு அல்லது அரை நாட்களுக்கு பெற்றோர்களே பணம் செலுத்துவார்கள்.

**பெற்றோர் கல்வி என்பதன் பொருள் என்ன? *பெற்றோர்களுக்கு வலுவூட்டுதல்***

"Deutsch für die Schule" திட்டத்தில் பங்கெடுக்கும் குழந்தைகளின் பெற்றோர்கள், திட்ட ஆண்டில் எட்டு பெற்றோர் கல்வி நிகழ்ச்சிகளில் பங்கேற்க ஒத்துக்கொள்கிறார்கள். இந்த நிகழ்வுகள் பெற்றோர்கள் தங்கள் குழந்தைகளை மொழி கற்றுக்கொள்வதை ஆதரிக்க உதவுகின்றன; அவர்களுக்கு பள்ளி அமைப்பு மற்றும் பிற பயனுள்ள தலைப்புகள் பற்றிய தகவல்கள் வழங்கப்படுகின்றன. ஜெர்மன் மொழித் திறன் இல்லாத பெற்றோர்களும், வேலைக்கு செல்லும் பெற்றோர்களும் பங்கேற்கக்கூடிய வகையில் பெற்றோரின் கல்வித் திட்டம் வடிவமைக்கப்பட்டுள்ளது. பெற்றோர் கல்வி இலவசமாக கொடுக்கப்படுகிறது.
ஜெர்மன் மொழி பேசும் பள்ளியில் கட்டாய பள்ளிப்படிப்பை முடித்த பெற்றோர்கள் இரண்டு நிகழ்வுகளில் பங்கேற்கிறார்கள்.

**திட்ட மேலாண்மை** “Deutsch für die Schule“:

Bettina Joos Lopez, Kornplatz 12, 7000 Chur
தொலைபேசி 081 254 46 24
ஈமெயில் deutschfuerdieschule@chur.ch

**தபால் முகவரி:**

Deutsch für die Schule, Kornplatz 12, Postfach 810, 7001 Chur www.chur.ch